நிலையினை "விடற்றவன்" என்ற தலைப்பு அழகாகவே சுட்டி நிற்கிறது.

இந்நாவலில் வரும் பாத்திரங்கள் நடப்பியல் மெய்மையை மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கிறார்கள். வெறும் பார்வையாளனாக நில்லாது, பங்கு கொண்டு தனது நீண்ட தொழிற்சங்க அநுபவத்தில் தான் தரிசித்த அவலங்களை, போராட்டங்களை, முரண்பாடுகளை சி. வி. வேலுப்பிள்ளை இந்நாவலிலே நுட்பமாக வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

"சங்கத்துக்கு நான் ஆள் சேர்க்கமாட்டேன். இது சத்தியம்" என்று நடுங்கிய கரங்களோடு கற்பூரத்தைத் தொட்டுச் சத்தியம் செய்யும் ராமலிங்கம் இரவோடிரவாக சங்கத்துக்கு ஆள் சேர்க்கிறான். பின்னால், "கடவுளே, எனக்குப் போகவழி தெரியவில்லையே, எனக்கு ஒரு எடமில்லையே" என்று வாய்விட்டுப் புலம்புகிறான். மார்க்ஸிய இயக்கவியலை அதன் பூரண அர்த்தத்தோடு விளங்கிக் கொள்ளும் ஒரு மார்க்ஸியவாதிக்கு இது சிக்கலை ஏற்படுத்த வேண்டியதில்லை. ஒரு வரட்டு மார்க்ஸியவாதிக்கு ராமலிங்கம் ஒடுக்கப்பட்ட மக்களை விடுதலைக்கு அழைத்துச் செல்லும் ஒரு தலைமைக் கதாநாயகனாகத் தெரியமாட்டான். "ஐயோ! வழி காட்டாமல் கண்ணீர் விடுகிறானே" என்று இவர்கள் ஒப்பாரி வைப்பதும் சாத்தியமே. "சமூகத்திற்கு வழிகாட்ட என்னிலும் மூத்தவர்கள் நிறைய இருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த பாதை சவக்குழிதான்" என்று நவசீன எழுத்தாளன் லூசுன் சொன்னதற்காக அவரை வரட்டு மார்க்ஸியவாதிதான் நிராகரிக்க முற்படுவான். மனித ஆன்மா அல்லது மனித ஆளுமை வெறுமனே சூழ்நிலை ஏற்படுத்திய தாக்கத்தினால் மட்டுமே வந்த விளைபொருளாகவன்றி சூழ்நிலைக்கு இயக்கவியல் ரீதியில் இசைந்தும் எதிர்த்தும் வளர்ந்து தாக்கத்தை ஏற்படுத்தும் சக்தியாகவும் அமைகிறது என்பதனை நாம் உணர வேண்டும். மனிதனின் சமூகப் பிரக்ஞையின் வளர்ச்சி என்பதும் இயக்கவியல் சார்ந்தது. பிரக்ஞை உரம்

''இதை எடுக்கப்பட்டபாடு சிவசூரியன் அறிஞ்சு போச்சுங்க'' என்ருன் முருகப்பன்.

ராமலிங்கம் பேசவில்லை. அவனைப் போலவே முத்தையாவும் பேசவில்லை, பிரதிநிதி லிஸ்டைப் பார்த்தபடி,

''சரி இன்னும் பாக்கி எவ்வளவு இருக்கு?''

''நூத்திபத்து பாக்கி''

''பாக்கியும் சேர்ந்தபின் துரைக்கு எழுதுவோம்'' என்ருர் பிரதிநிதி.

''அதுதானுங்க நல்லது,'' என்ருன் ராமலிங்கம்.

''மெஜாரிட்டி நம்மகிட்ட இருக்கையிலே தொரக்கி அத்தாரிட்டி போனு தானுங்க மத்த ஆளுகளையும் சேர்க்க முடியுங்க'' என்ருன் முருகப்பன்.

''ஆக்கப் பொறுத்தது ஒனக்கு ஆறப் பொறுக்கல்லே. பிரியப்படி செய்யுங்க சார்.

''சரி பேச்சாளராக யாரைப் போடுவது?''

ராமலிங்கத்தை சிபாரிசு செய்வதுபோல முத்தையா ராமலிங்கத்தின் முகத்தையும், பிரதிநிதியையும் பார்த்தான். ஆனல், முருகப்பன் ஒன்றும் தெரியாதவனைப்போல் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த நேருவின் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''யாரையாவது போடுங்க'' என்ருன் ராமலிங்கம்.

''அனுபவம் வேண்டும்'' என்ருர் பிரதிநிதி.

''கஷ்டப்பட்டாதானுங்க அனுபோகம் வரும். ரவ்வு பகலாகத்தான் வேலை செஞ்சேன்'' என்ருன் முருகப்பன்.

''சரி சார் முருகப்பனைப் பேச்சாளராகப் போடுங்க, இதுக்கா இவ்வளவு யோசனை'' என்ருன் ராமலிங்கம்.

பக்கத்தில் படுத்தாள். மூன்ருவது வீட்டில் தனி வாழ்க்கை நடத்தும் பழனிமாமா இரவில் பக்திப் பாடல்கள் பாடுவ துண்டு. ஆனுல், இன்று வழக்கத்திற்கு மாருக ஒரு அபச குன பாட்டைப் பாடினுர்.

குரவன் சட்டியிலே முட்டை அவிச்சான் - சாமி
முட்டை அவிச்சான்
அவன் சாகும்வரை தூக்கம் வச்சான் - சாமி
தூக்கம் வச்சான்.

அவர் பாடிய துக்கம் ததும்பிய குரல் ராமலிங்கத்தை என்னவோ செய்தது. கமலமும் மென்மையான மனதை யுடையவள். தூங்குவது போல பாவனை செய்துகொண்டு கிடந்தாள். தூக்கம் வரவில்லை. வெகு நேரத்திற்கும் பின் கண்ணயர்ந்த போது யாரோ அவள் கழுத்தை நெரிப்பது போல் உணர்ந்து திரும்பிப்படுத்தாள்.

ராமலிங்கத்துக்கு எப்படி தூக்கம் வரும்? கூரைக்கு மேல் காற்று ஹோ, ஹோ என்று அலறிக்கொண்டிருந்தது அந்த நேரத்தில் யாரோ கதவைத்தட்டும் சத்தம் கேட்டது.

''யாரது?''

''நான்தான் தலவரே'' என்று முருகப்பன் குரல் கொடுத்தான்.

ராமலிங்கம் எழுந்து கதவைத் திறந்துகொண்டு வெளி யில் போனுன்.

''என்ன இந்த நேரத்திலே?''

''நாளைக்கு லீவு போனஸ் எடுக்கப் போறேன். உடுபு சலாவுக்குப் போயிட்டு வரனும். ஒரு கிழமை போகும். எல்லாம் பாத்துக்கிருங்க'' என்ருன்.

கள் தொழிலாளர்களைக் கப்பிக்கொண்டிருந்த பாரத்தை அசைத்து விட்டது. தோட்ட அதிகார வர்க்கத்தின் ஆட்சி, சந்து பொந்து, மூலை முடுக்கு எல்லாம் வியாபித்திருந்த புகைமுட்டியாக, பெருச்சாளி வெளிக்கிளம்புவது போல வெளியானது. லயங்களில் தொழிலாளர்கள் பயமில்லாது பகலிலும் இரவிலும் கூட நடமாடினார்கள். பயம் என்னும் வார்த்தை நகருவது போலிருந்தது.

கையொப்பமிடும்போது மகஜரிலும் என்ன என்ன எழுதியிருக்கிறதென்று எவரும் வாசிக்கவில்லை. ஒற்றுமையின் பெயராலும், தங்களுக்கு ஞாயம் பிறக்கவேண்டுமென்ற நம்பிக்கையிலும் ஒப்பம் இட்டார்கள்.

இரவு பதினொரு மணிக்கு எல்லாம் இந்த வேலை முடிந்ததும் மகஜர் ராமலிங்கத்தின் வீடு வந்து சேர்ந்தது. குடும்பத் தலைவர்களின் பெயர்களை எண்ணிப்பார்த்து திருப்தியடைந்தான். கவலையும் சந்தோசமும் மாறிமாறி அவன் மனதை அழுத்தின. அவன் படுத்துத் தூங்கும்போது இரவு ஒரு மணியாகிவிட்டது.

அடுத்தநாள் ராமலிங்கம் ஜில்லாக் காரியாலயத்துக்குப் போய் மகஜரைப் பிரதிநிதியிடம் சேர்த்தான். அவர் பல தடவை மகஜரை வாசித்து, அதிலுள்ள கையொப்பங்களைப் பரிசோதித்து திருப்தியடைந்தார்.

ராமலிங்கம் மகஜரில் கையொப்பம் எடுக்கும்போது நடந்த சம்பவங்கள் பற்றி பிரதிநிதியிடம் சொன்னார். அவற்றை ரசனையோடு கேட்டுச் சந்தோசப்பட்டார் பிரதிநிதி.

"ராமலிங்கம் இந்த மகஜர் நம்பிக்கையில் பெரும் வாளாயுதம் இல்ல, ராமபாணம். உங்களுக்கு ஆபத்து வரும்போது இதை எடுத்து சொலட்டிவிடுவோம். அப்போது தோட்டத்துரையின் சைனியங்கள் எல்லாம் சாம்பலாய்ப் போகும். புரிகிறதா?"

விரதம் பிடித்தார். ஆனால், காமாட்சியம்மாள் அவருக்குத் தெம்பு சொல்லி உணவு உட்கொள்ளச் செய்தாள்.

வழக்கம் போல் அன்று மாலை ஒரு கூட்டம் கூடியது. வேலைகாட்டில் தொழிலாளர்கள் பேசும் வகைகளைப் பொறுக்க முடியாத கங்காணிகள் ஆவேசத்தோடு பேசினார்கள்.

"பேய்புடிச்ச மாதிரி ஆம்புளேயும், பொம்பளேயும் ஆடுராங்க. ஒரு பேச்சு சொல்லுங்க. குதிக்காலு நரம்பே வெட்டிக்கிட்டு வர்ரேனுங்க."

"நாய் புடிக்க தெரியாத பயல் இப்புடி செஞ்சிட்டானுங்களே."

"நர்க்கே புடிங்கிக்கிட்டு சாகலாமுனு வருது."

இடி விழுந்த வாழை மரத்தைப்போல் சாய்வு நாற்காலியில் துவண்டு கிடந்த பெரியசாமி காதில் அவர்கள் பேச்சு ஏறவில்லை.

திரைச் சீலையை மடித்துக் கொண்டு அமைதியோடு நின்ற காமாட்சியம்மாள் "நமக்கு சொல் புத்தி வேணும். இல்லாட்டி சொயபுத்தி வேணும். ரெண்டையும் சாமி நமக்கு குடுக்கலியே" என்றாள்.

"கெட்ட காலத்துக்கு எல்லாம் கெட்டதுங்க" என்றான் ஒரு கங்காணி.

"அதெல்லாம் சொல்லாதே தம்பி. இனியாவது சமாதானமாயிருக்க பாருங்க. நா இன்னமும் சொல்றேன். வெள்ளேகாரனும் சரி செவத்திலே ஒட்டுன சுண்ணாம்பும் சரினு சொல்லுவாங்க. அது சரியா போச்சு. அவ்னுக்காக நம்ம சொந்த எனத்தே வஞ்சிச்சோமே. இப்ப என்ன ஆச்சு?" என்றாள் காமாட்சியம்மாள்.

''பேசவாண்டாம் பெரியசாமி. ஒன்மகன் பெரளிகாரன். பெரிய கிளாக் சொல்லியாச்சு. அவனுக்கு ஆபீஸ் வேலே யில்லே.''

''கிளாக்கர் ஐயா சமயம் பாத்து கழுத்தே அறுத்திட்டிங்களே.''

கிளார்க் பேசவில்லே.

''தொரைகளே ஒரு வார்த்தே. எங்க தாத்தா இந்த தோட்டத்திலே கோப்பி போட்டார். எங்கப்பா தேயிலே போட கூனியடிச்சாரு. அதுக்குப் புறகு எவ்வளவு காலம் கம்பனிக்கு சப் பாரிச்சு குடுத்தேன். காட்டே அழிச்சு தோட்டம் உண்டாக்கினது என் குடும்பம். இப்ப என்னே பாருங்க! ஒங்களே நம்பி என் ஆளுகளே கூட பகைச்சேன், சார்.''

''சும்மா பேசவாண்டாம், பெரியசாமி.''

''எல்லாத்துக்கும் கடவுள் இருக்குறாரு தொரகளே. நாளேக்கே நான் ராசனேக் கண்டு பதில் கொண்டாரேன். அதுவரைக்கும் எனக்கு ஒதவி செய்யுங்க.''

''ராமலிங்கம் மேலே வளக்கு போட் வெளியே போடுவேன் சொல்.''

துரை எழுந்து உள்ளே போனர்.

பெரியசாமி வீட்டை நோக்கி நடந்தார். நடக்க முடியவில்லே. நிலே குலேந்து விட்டது. எண்பது வருடம் பாட்டன் காலத்தில் இருந்து பெருமையோடு வாழ்ந்த வாழ்க்கை இமைப்பொழுதில் சர்ம்பலாய் போய்விட்டது. நிதானமாயும் சிந்திக்க முடியவில்லே. பொறி கலங்கிய நிலேயில், எதிர் வருகிறவர்கள் கூட தெரியாமல் குனிந்த தலே நிமிராமல் நடந்தார்.

ஒவ்வொரு தொழிலாளியும் தொழில் இலாக்கா அதிகாரி முன் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அதற்குப் பின் விசாரணை முடிந்துதான் முடிவு செய்வதென்பதற்கு என்னவாகியது? முதல் திகதிக்கு துரைபிரட்டு, மகனுக்கு வேலையில்லை, ராமலிங்கத்தை உடன் வெளியே போட கோட்டு வழக்கு. இதற்கு காரணம் யாராயிருக்க முடியும்? இந்த விதமான பயங்கர நிலைமையை பெரியசாமி கனவிலும் எதிர்பார்த்ததில்லை. பெரிய கிளாக்கரும் தன் மருமகன் ஒண்டிமுத்தும் சேர்ந்து தான் இந்தச் சதி செய்திருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வந்தார். ஒண்டிமுத்து மனப்பால் குடிப்பது பற்றி ராமலிங்கம் சொன்னது நிசமாகி விட்டது. போக்கிடமில்லாது திரிந்த ஒண்டிமுத்தை கொண்டுவந்து ஆதரித்து ஆளாக்கியதற்கு இதுவா கைம்மாறு என்று நெஞ்சை தடவிக் கொண்டு நடந்தார்.

முகில் கூட்டம் பந்தி பந்தியாய் கணவாய் வழியாக எங்கும் பரவியது. குளிர் காற்று வீசும்போல சுரந்து பரவியது மாலை மயங்கி இருள் கப்பிக் கொண்டு படர்ந்தது.

பெரியசாமி வீடு வரும்போது விளக்கு வைத்தாகி விட்டது. காமாட்சியம்மாளும் அவர்களது நெருங்கிய பந்துவான பழனி மாமாவும் மாத்திரம் கவலையோடு வழியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பெரியசாமி வந்ததும் சாய்வு நாற்காலியில் அமர்ந்தார். நிலைமையைப் புரிந்து கொண்ட காமாட்சியம்மாள், ""குடிக்க ஏதாவது கொண்டாறேன்" என்று பின்கட்டுக்குப் போனாள்.

பெரியசாமி எதைச் சொல்வது எதைச் சொல்லக் கூடாது என்ற முடிவுக்கு வர முடியவில்லை. அப்போது காமாட்சியம்மாள் இருவருக்கும் தேனீர் கொண்டு வந்தாள்.

""என்ன இப்புடி இருக்கிறீங்க?" என்றாள்.

''மாப்புள்ளே, தொர்ரே என்ன சொன்ணுரு'' என்று பழனி மாமா கேட்டார்.

''என்னத்தே சொல்ல. ராமலிங்கத்தை வெளியே போட கோட்டுலே வழக்கு போடுவாராம். தம்பி சிவனையாவுக்கு வேலேயில்லே. முதல் தேதி 119 ஆளும் துரை பெரட்டு.''

அதற்கு மேல் அவருக்கு பேச முடியவில்லே காமாட்சியம்மாள் திகைத்து மூச்சுவிட முடியாமல் சிலே போல் நின்ருள்.

''மாப்புள்ளே அழியாத கோட்டைக்கி ஆவத்து வந்திரிச்சு. கடவுள் கைவிட மாட்டார். அந்த ராமலிங்கத்தை கூப்பிட்டு நீ பேசு அம்மா. ஆவத்துக்குப் பாவமில்லே. ஒன் மொகத்துக்காக ஏண்டதே செய்வான். அவன் துடிக் காட்டியும் சொந்த ரத்தம் துடிக்கும்'' என்ருர்.

''நல்லது பெரியப்பா'' என்று சொல்லிவிட்டு கணவனைப் பார்த்து, ''நீங்க தொரைக்கி என்ன சொன்னீங்க?'' என்ருள்.

''கண்டுரோல் வந்து நோட்டீஸ் எடுக்கோனும். ராஜன் தலேவர் கிட்டே பேசப்போர்ரமின்னு சொன்னேன்.''

''தொரே வதல் சொல்லலயா?''

''ராமலிங்கத்தே வெளியே போடப் போறதா சொல்லுன்ணுரு.''

''பாத்தீங்களா பெரியப்பா வெள்ளெகாரன் மகுடியே! அதெல்லாம் நமக்கு வேண்டாம். அரசனே நம்பி புருசனே கைவிட்ட மாதிரிதான் நம்ம நிலமே. வெள்ளக்காரன் ஒரவு இப்பவாவது நமக்கு தெரியனும். இனி மந்தரமும் மாயமும் பலிக்காது. ஏதோ புத்தியே கடன் கொடுத்திட்டோம்.

# 12

மறுநாள் காலையில் தோட்டம் தேடிப்போவதற்கு ராமலிங்கம் தயாராஞன். இந்த வேலை அவனுக்குப் புதிய அனுபவமில்லை. அதை நினைக்கும்போதே அவன் இரத்தம் குளிர்ந்து விட்டது. உள்ளங்காலில் வெள்ளெலும்பாட என ஒரு காலத்தில் பாட்டாயிருந்தது. பின் உண்மையாக மாறியதை நினைக்கும்போது சிரிப்பைக்கூட அவன் மறந்து போனுன்.

கஷ்டகாலம் வந்ததை நினைத்துப் பெருமூச்சுவிட்டான். நடை, பசி, பட்டினி இவைகளைப்பற்றி அவன் பயந்து அஞ்சிவிடவில்லை. ஆனல், தாய் மனைவி இருவரையும் கஷ்டத்துக்குள்ளாக்கி விட்டோமே என்று தன்னை நிந்தித்துக் கொண்டான்.

அதிகாலையில் எழுந்து முக்கிய நண்பர்களைக் கண்டு அவர்களிடம் வேலை தேடிப்போவதைப்பற்றி தெரிவித்து தான் வரும்வரை குடும்பத்தைக் கவனித்துக்கொள்ளும்படி

''ஒரு மாதமாய் வேலே இல்லீங்க சார்.''

''அப்படியா. விசாரணை ஏதாவது நடந்ததா?''

''பெரிய பிரச்சினையா போச்சுங்க. சங்கத்துக்கு ஆள் சேத்ததுக்கு எனக்கு பத்துச் சீட்டு. பின்னலே தொரைபிரட்டு, தொழில் கோடு, அத்துமீறி வழக்கு எல்லாம் வந்திரிச்சுங்க. நம்ம ராஜன் தலேவர்தான் எல்லாம் நடத்திருங்க.''

''அப்படியா? கடைசியில் முடிவு என்ன ஆச்சு?

''இரண்டு மாசத்துக்கு முந்தி தோட்டம் விட்டுப் போகச் சொல்லி விட்டார் நீதவான். தொழில் கோட்டிலே வெத்தி கிடைச்சா திருப்பி வேலே கொடுக்க தீர்ப்புங்க.''

''அது நமக்கு வெத்தி. தற்காலிகமா தோட்டம் விட்டுப் போகனும். சாப்பாட்டுக்கு மேலே இங்கிட்டு தோட்டம் தேடுங்க தலவரே. ரவைக்கு இங்கே வாங்க'' என்று அன்போடு ஆதரவு சொல்லி சாப்பாட்டுக்கு பணம் கொடுத்தார்.

நன்றி தெரிவித்துவிட்டு ராமலிங்கம் புறப்பட்டான். கடைவீதியில் சாப்பிட்டுவிட்டு பக்கத்தில் உள்ள தோட்டங்களுக்குப் போய் வேலே கிடைக்குமா என்று விசாரித்தான். போகும் இடமெல்லாம் வழக்கம் போல் இல்லே என்ற பதில் தான் கிடைத்தது. மாலே மயங்கி இருண்டுகொண்டு வந்தது. ராமலிங்கம் இரவை சங்க காரியாலயத்தில் கழிப்பதற்கு விரைந்து நடந்தான். கடைவீதியை அடைந்து தேனீர் கடைக்குள் நுழையும் போது எதிர்பாராவிதமாய் பழைய நண்பனை கதிர்வேலேக் கண்டான். இருவரும் சுகம் விசாரித்துக் கொண்டனர். இராமலிங்கம் தனக்கு ஏற்பட்டுள்ள சங்கடத்தைப்பற்றி நாலு வார்த்தையில் சொன்னன்.

